# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## 2003 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம் (திருத்தச்) சட்டம்

---

(2003 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 31 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)

அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது

---

2003, ஏப்பிறல் மாதம் 04 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

---

கொழும்பு 1. அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

## 2003 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம் (திருத்தச்) சட்டம்

[2003 ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 31 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.]

ச. வை—ஒ. 50/2001

## 1997 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

*சுருக்கப் பெயர்.*

1. இச்சட்டம், 2003 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

*1997 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்கச் சட்டத்தின் 2 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

2. (இதனகத்துப் பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) 1997 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனத்தின் 2 ஆம் பிரிவு, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் "(இதனகத்துப்பின்னர் "கூட்டுத்தாபனம்" எனக் குறிப்பீடுசெய்யப்படுவதான) "இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம்"' என்னும் சொற்களுக்குப் பதிலாக (இதனகத்துப்பின்னர் "வீ.அ.நி.கூ. வங்கி" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) "இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கி"' என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகிறது.

*இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம் மற்றும் "கூட்டுத்தாபனம்" என்பன முறையே "வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கி" மற்றும் "வீ.அ.நி.கூ. வங்கி" எனக் குறிப்பீடு செய்யப்படுதல்.*

3. (1) முதன்மைச் சட்டவாக்கத்திலும் (விரிவுப்பெயர் தவிர்ந்த) மற்றும் எழுதப்பட்ட வேறு ஏதேனும் சட்டத்திலும் (வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனத்தைக் குறிக்கின்ற) "இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம்" மற்றும் "கூட்டுத்தாபனம்" என்னும் சொற்களுக்குப் பதிலாக முறையே "வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கி" மற்றும் "வீ.அ.நி.கூ. வங்கி" என்னும் சொற்கள் பதலீடுசெய்யப்படுதல் வேண்டும்.

(2) வேறு ஆவணத்திலிருந்தான ஏதேனும் அறிவித்தல், அறிவிப்பு, ஒப்பந்தம், தொடர்பாடல், என்பவற்றிலுள்ள "இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம்" என்பதற்கான குறிப்பீடு ஒவ்வொன்றும் வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கிக்கான குறிப்பீடொன்றாக வாசிக்கப்பட்டுப் பொருள்கொள்ளப்படுதல் வேண்டும்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 3 ஆம் பிரிவைத் திருத்துதல்.

4. முதன்மைச் சட்டவாக்கத்தின் 3 ஆம் பிரிவு அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (ஈ) என்னும் பந்தியில் "நான்கு பணிப்பாளர்கள்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "ஐந்து பணிப்பாளர்கள்" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 12 ஆம் பிரிவைத் திருத்துதல்.

5. முதன்மைச் சட்டவாக்கத்தின் 12 ஆம் பிரிவு அப்பிரிவின் (அ) என்னும் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :—

"(அ) 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, வங்கிச் சட்டத்தின் 76ஒ என்னும் பிரிவின் கீழ் பணச்சபையால் வழங்கப்பட்ட பணிப்புகளுக்கிணங்க வதிவிட ஆதனத்தின் மீட்புக்காக, எவரேனும் தனி ஆளுக்கு, கம்பெனிக்கு, பங்காண்மைக்கு, ஏதேனும் நிறுவகத்துக்கு அல்லது வீடமைப்பு நோக்கங்களுக்காக, வீடமைப்பு நிதிக் கூட்டுத்தாபனத்துக்கு ஏதேனும் கடனை, கடன்வசதியை அல்லது ஏதேனும் வகையான பண உதவியை அளித்தல் ;".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 13 ஆம் பிரிவைத் திருத்துதல்.

6. முதன்மைச் சட்டவாக்கத்தின் 13 ஆம் பிரிவு, அப்பிரிவின் (அ) மற்றும் (ஔ) என்னும் பந்திகளை நீக்கிவிட்டு அவற்றிற்குப் பதிலாகப் பின்வரும் பந்திகளை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :—

"(அ) வீடமைப்பு நோக்கங்களுக்காக எவரேனும் தனி ஆளுக்கு, கம்பெனிக்கு, பங்காண்மைக்கு, ஏதேனும் நிறுவகத்திற்கு அல்லது வீடமைப்பு நிதிக் கூட்டுத்தாபனத்துக்கு கடன்களை அல்லது நிதியுதவியை அளித்தல் ;"; அத்துடன்

(ஔ) பணச்சபையால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய நியதி நிபந்தனைகள் மீது அல்லது பணச்சபையால் வழங்கப்பட்ட ஏதேனும் பணிப்புரைமீது பணத்தைக் கடனாகப் பெறுதலும், திரட்டுதலும் ;".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 14 ஆம் பிரிவைத் திருத்துதல்.

7. முதன்மைச் சட்டவாக்கத்தின் 14 ஆம் பிரிவு, அப்பிரிவின் 2 ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகிறது :—

"(2) பொதுமுகாமையாளர் வீ.அ.நி.கூ. வங்கியின் முழு நேர அலுவலரொருவராக இருத்தல் வேண்டும். அவர் வீ.அ.நி.கூ. வங்கியின் பிரதான நிறைவேற்று அலுவலராக இருத்தல் வேண்டும் என்பதுடன், தவிசாளருக்கும் பணிப்பாளர்கள் சபைக்கும் பொறுப்புடையவராகவும் பதில் சொல்லக்கூடியவராகவும் இருத்தலும் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 15 ஆம் பிரிவைத் திருத்துதல்.

8. முதன்மைச் சட்டவாக்கத்தின் 15 ஆம் பிரிவு, அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப்பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :—

"(2) சபையானது, வங்கியின் குறிக்கோள்களையும் தொழிற்பாடுகளையும் ஒத்த குறிக்கோள்களிலும் தொழிற்பாடுகளிலும் ஈடுபட்டுள்ள அரசுக்குச் சொந்தமான வங்கி நிறுவகங்களின் தொழிலாளர்களின் சம்பளங்கள் மற்றும் படிகளின் நியதிகளுக்கிணங்க வங்கியின் அத்தகைய அலுவலர்கள் மற்றும் பணியாளர்களின் சம்பளங்கள் மற்றும் படிகளைக் காலத்துக்குக்காலம் நிர்ணயிக்கலாம், அத்துடன் மாற்றலாம்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 17 ஆம் பிரிவைத் திருத்துதல்.

9. முதன்மைச் சட்டவாக்கத்தின் 17 ஆம் பிரிவு, அப்பிரிவின் 5 ஆம் மற்றும் 6 ஆம் உட்பிரிவுகளை நீக்கிவிட்டு அவற்றிற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :—

"(5) வங்கியானது, 1995 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, வங்கிச் சட்டத்தின் 76ஒ என்னும் பிரிவின் கீழ் இலங்கை மத்திய வங்கியின் பணச் சபையால் காலத்துக்குக்காலம் வழங்கப்பட்ட பணிப்புக்களுக்கு அமைவாக ஏதேனும் பங்கை ஒதுக்குதல் வேண்டும் அல்லது ஏதேனும் பங்கைப் பதிவுசெய்தல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 22 ஆம் பிரிவைத் திருத்துதல்.

10. முதன்மைச் சட்டவாக்கத்தின் 22 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகிறது :—

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில், "பங்குத் தொகுதிகளை உருவாக்கலாம் என்பதுடன், அவ்வாறு உருவாக்கப்பட்டு வழங்கப்பட்ட பங்குத் தொகுதி முறிகளும் பங்குத்தொகுதியும் இச்சட்டத்தில் முறையே "வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனப் பங்குத்தொகுதி முறிகள்", அத்துடன் "வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனப் பங்குத்தொகுதி" எனக் குறிப்பீடுசெய்யப்படுதல் வேண்டும்." என்னும் சொற்களுக்குப் பதிலாக "பிணையங்களையும் உருவாக்கலாம் என்பதுடன், அவ்வாறு உருவாக்கப்பட்டு வழங்கப்பட்ட பங்குத் தொகுதி முறிகளும் பிணையங்களும் இச்சட்டத்தில், முறையே "வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன (வங்கி) பங்குத்தொகுதி முறிகள்" அத்துடன் "வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன (வங்கி) பிணையங்கள்" எனக் குறிப்பீடுசெய்யப்படுதல் வேண்டும்." என்னும் சொற்களை இடுவதன்மூலமும் ;

(2) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் "வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன பங்குத்தொகுதி முறைகளும், வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன பங்குத்தொகுதியும்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன (வங்கி) பங்குத்தொகுதி முறிகளும், வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத் தாபன (வங்கி) பிணையங்களும்" என்னும் சொற்களை இடுவதன்மூலமும்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 23 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**11.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 23 ஆம் பிரிவு "அத்துடன் ஏதேனும் வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனப் பங்குத்தொகுதி" என்னும் சொற்களுக்குப் பதிலாக "அத்துடன் ஏதேனும் வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன (வங்கி) பிணையங்கள்" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகிறது.

33 ஆம் பிரிவை நீக்குதல்.

**12.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 33 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்படுகிறது.

**13.** முப்பத்தெட்டாம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுகிறது என்பதுடன், அது முதன்மைச் சட்டவாக்கத்தின் 38அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும் :– முதன்மைச் சட்டவாக்கத்தில் 38அ என்னும் பிரிவை உட்புகுத்துதல்.

"இலங்கை மத்திய வங்கியின் பணச் சபையால் வழங்கப்பட்ட பணிப்புக்கள் 38அ. 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, வங்கிச் சட்டத்தின் 76ஜ என்னும் பிரிவின்கீழ்ப் பணச்சபையினால் காலத்துக்குக்காலம் வழங்கப்பட்ட பணிப்புக்கள், இச்சட்டத்தில் அல்லது அதன் கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதிகளில் எக்கருமம் தொடர்பில் எவ்வேறுபாடும் ஆக்கப்படவில்லையோ அவ்வேதேனும் கருமம் தொடர்பில், வீ.அ.நி.கூ. வங்கிக்கு ஏற்புடைத்தாதல் வேண்டும்.".

**14.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 40 ஆம் பிரிவு அப்பிரிவின் (ஆ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் பந்தியை உட்புகுத்துவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகிறது : – முதன்மைச் சட்டவாக்கத்தின் 40 ஆம் பிரிவைத் திருத்துதல்.

"(இ) 1954 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க, தேசிய வீடமைப்புச் சட்டத்தின் பாகம் IX இன்கீழ் (401ஆம் அத்தியாயம்) வரையறுக்கப்பட்ட இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனத்தால் ஆரம்பிக்கப்பட்டதும் மற்றும் வரையறுக்கப்பட்ட வீடமைப்பு நிதிக் கூட்டுத்தாபனம் கலைக்கப்பட்டதாகக் கருதப்படும் திகதிக்கு நேர்முந்திய நாளன்று தீர்க்கப்படாது இருந்துவருவதுமான வழக்கு அல்லது நடவடிக்கை ஒவ்வொன்றும், அந்த நாளிலிருந்து வலுவுள்ளதாகுமாறு, கூட்டுத்தாபனத்தால் ஆரம்பிக்கப்பட்ட வழக்கு அல்லது நடவடிக்கை ஒன்றெனக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், அதற்கிணங்க அத்தகைய வழக்கு அல்லது நடவடிக்கை முடியும் வரையில் மேற்கொள்ளப்பட்டுப் பதியப்படலாம்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 44 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**15.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 44 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது : —

(அ) "தவிசாளர்" என்னும் சொல்லமைப்பின் வரைவிலக்கணத்துக்கு நேர்முன்னர் பின்வரும் வரைவிலக்கணத்தை இடுவதன் மூலமும் :—

"பண உதவி" என்பது, எதிர்பாராப் பொறுப்பொன்றை ஏற்றுக் கொள்வதற்கான பொறுப்பேற்பொன்று உள்ளடங்கலாக ஏதேனும் கடன் அல்லது மேலதிகப் பற்று அல்லது முற்பணம் அல்லது ஏதேனும் கடன் அல்லது மேலதிகப்பற்று அல்லது முற்பணத்தை வழங்குவதற்கான ஏதேனும் பொறுப்பேற்பு என்று பொருள்படும் ;":

(ஆ) "உள்ளூர் அதிகாரசபை" என்னும் சொல்லமைப்பின் வரைவிலக்கணத்தை உடனடுத்துப் பின்வரும் வரைவிலக்கணத்தை உட்புகுத்துவதன்மூலமும் :—

"பணச்சபை" என்பது, பணச்சட்டத்தின் (422 ஆம் அத்தியாயம்) கீழ்த் தாபிக்கப்பட்ட இலங்கை மத்திய வங்கியின் பணச்சபை என்று பொருள்படும் ;".

சேமிப்புகள்.

**16.** (1) இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு நேர்முன்னரான நாளன்று உளதான இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனத்தின் எல்லா ஒப்பந்தங்களும் உடன்படிக்கைகளும் மற்றும் வேறு சாதனங்களும் வீ.அ.நி.கூ. வங்கியினால் செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தங்களாக, உடன்படிக்கைகளாக மற்றும் வேறு சாதனங்களாகக் கருதப்படுதல் வேண்டும்.

(2) இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனத்தால் அல்லது அதற்கெதிராக ஆரம்பிக்கப்பட்டதும் அத்துடன் இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு நேர்முன்னரான நாளன்று தீர்க்கப்படாதிருக்கின்றதுமான எல்லாத் தொடர்ச்சிகள், வழக்குகள் மற்றும் வேறு சட்ட நடவடிக்கைகள் இலங்கை வீ.அ.நி.கூ. வங்கியினால் அல்லது அதற்கு எதிராக ஆரம்பிக்கப்பட்ட தொடர்ச்சிகளாக, வழக்குகளாக மற்றும் வேறு சட்ட நடவடிக்கைகளாகக் கருதப்படுதல் வேண்டும்.

(3) இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு நேர்முன்னரான நாளன்று உளதான இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனத்தின் எல்லா உரிமைகளும் பொறுப்புகளும் கடப்பாடுகளும், இலங்கை வீ.அ.நி.கூ. வங்கியின் உரிமைகளாகவும் பொறுப்புகளாகவும் கடப்பாடுகளாகவும் கருதப்படுதல் வேண்டும்.

(4) ஏதேனும் வழக்கில் அல்லது நடவடிக்கையில் ஏதேனும் நீதிமன்றத்தினால் இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனத்துக்குச் சாதகமாக அல்லது அதற்கு எதிராகப் பதியப்பட்ட ஒவ்வொரு தீர்வையும், கட்டளையும் அல்லது தீர்ப்பும் இச்சட்டம் தொடங்கும் திகதியிலிருந்து வலுவுக்கு வருமாறு இலங்கை வீ.அ.நி.கூ. வங்கிக்குச் சாதகமாக அல்லது எதிராகப் பதியப்பட்ட தீர்வையாக, கட்டளையாக அல்லது தீர்ப்பாகக் கருதப்படுதல் வேண்டும்.

17. 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, வங்கிச் சட்டத்தின் III ஆம் அட்டவணை, அவ்வட்டவணையின் இறுதியில் பின்வரும் புதிய விடயத்தைச் சேர்ப்பதன்மூலம் இத்தால் திருத்தப்படுகிறது :—

*1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, வங்கிச் சட்டத்தின் III ஆம் அட்டவணையைத் திருத்துதல்.*

> "(5) 1997 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத் தாபனச் சட்டத்தால் தாபிக்கப்பட்ட இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம் (வங்கி).".

18. ஈட்டுச் சட்டத்தின் 47அ என்னும் பிரிவு, அப்பிரிவின் 7 ஆம் உட்பிரிவில் அதன் (இ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியை உட்புகுத்துவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகிறது :—

*89 ஆம் அத்தியாயத்தின் 47அ என்னும் பிரிவைத் திருத்துதல்.*

> "(இஇ) 1997 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனச் சட்டத்தால் தாபிக்கப்பட்ட இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம் (வங்கி) ;";

19. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

---

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387; (வெளிநாடு) ரூபா 1,849 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்குமுன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், இல.32, திரான்ஸ்வேர்க்ஸ் இல்லம், லோட்டஸ்ரோட், கொழும்பு 01 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.